உ
சிவமயம்

# அகில இலங்கை இந்துமாமன்றம்

(இலங்கை இந்துமன்றஅமைப்புகளினதும் ஆலய நம்பிக்கைபொறுப்புகளினதும் ஒன்றியம்)

# ALL CEYLON HINDU CONGRESS

(Federation of Hindu Religious Associations and Temple Trusts in Sri Lanka)

தலைவர் (President):
மாணிக்கம் தவயோகராஜா
Manickam Thavayogarajah
Phone: 0112695120 (Res)
Mobile: 0777786686
mthavam@gmail.com

பொதுச் செயலாளர் (General Secretary):
வேலுப்பிள்ளை கந்தசாமி
VelupillaiKandasamy
Phone: 0112586620 (Res)
Mobile: 071-5349150
vkandasami@gmail.com

பொருளாளர் (Hony. Treasurer):
அ. கயிலாசபிள்ளை
Abirami Kailasapillai
Phone: 0112575566 (Res)
Fax : 0112575472
hariomak@gmail.com

27-01-2021

பத்திரிகைச் செய்தி

**இந்தியா அன்பளிப்பாக வழங்கும் கொரோணா தடுப்பூசிக்கு இலங்கை மக்களின் நன்றி**

கடந்த பல மாதங்களாக உலகமே எதிர்கொண்டுள்ள கொரோணா தொற்று நிலைமையினால் முழு உலகமும் கடும் இடர்களை எதிர்நோக்கியாவாறு உள்ளது. அந்த வகையில் இலங்கையும் கொரோணா தொற்றின் பிடியில் சிக்கி அதிலிருந்து மீளெழுவதற்கான சகல முயற்சிகளையும் செய்து வருகின்றது.

உலகில் கொரோணா தொற்றுக்கான தடுப்பு மருந்துகளை ஓரிரு நாடுகளே கண்டுபிடித்து வெற்றிகண்டுள்ள நிலையில் நமது அயல் நாடான இந்தியாவில் இரண்டு வகை தடுப்பு மருந்துகள் தயாரிக்கப்பட்டு மக்களுக்கு இலவசமாக போடப்பட்டுவருகின்றது.

இலங்கைக்கு வரலாற்றுரீதியாக நெருங்கிய உறவான நாடு என்றவகையில் இந்தியா பல மனிதாபிமான உதவிகளை பல தடவைகள் ஆற்றியிருக்கின்றது. அதனடிப்படையில் தற்போதுஇந்திய அரசாங்கத்தினால் ஒரு தொகை கொரோணா தடுப்பு மருந்துகள் முதற்கட்டமாக இலங்கைக்கு இலவசமாக வழங்கி, இலங்கை மக்களுக்கு தனது அக்கறையை மீண்டும் தெரியப்படுத்தியுள்ளது. இப்பெரும் உதவிக்கு இந்திய அரசாங்கத்திற்கும், தடுப்பு மருந்தினைக் கண்டு பிடிப்பதில் ஈடுபட்ட விஞ்ஞானிகள், மருத்துவர்கள் அனைவருக்கும் இலங்கை மக்கள் சார்பில் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

எதிர்வருங் காலங்களிலும் இவ்வாறான தடுப்பு மருந்துகளை மேலும் இலங்கைக்கு வழங்கியுதவுமாறும் நாம் அன்புடன் எமது கோரிக்கையை முன்வைக்கின்றோம்.

நன்றி

வே.கந்தசாமி

பொதுச் செயலாளர்.